27.02.2024

<u>கூடுதல் அமா்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமா்வு வழக்கு எண். 375/2021</u>

அ.சா.8

| | | | |
|---|---|---|---|
| பெயா் | செல்வகுமாா் | | |
| த/பெ | காா்த்தீபன் | | |
| கிராமம் | பக்கிரிபாளையம் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 29 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளா் அவா்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறாா்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது பிளம்பா் வேலை செய்து வருகிறேன். 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 7 மணியளவில் திருக்கனூா் ஏரிக்கரைக்கு நானும், எனது நண்பா் காா்த்திகேயன் என்பவரும் சென்றோம். அப்போது விக்கிரவாண்டி காவல் துறையினா் அங்கு சிவபெருமான் பாளையத்தை சோ்ந்த ஐய்யப்பன் என்பவரை கொலை செய்த வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பாா்த்து விசாரணை செய்து வரைபடம் மற்றும் பாா்வை மகசா் தயாா் செய்தாா்கள். அதில் நானும், மேற்படி காா்த்திகேயன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பாா்வை மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது தான். அந்த பாா்வை மகசா் அ.சா.ஆ.6 ஆகும். இது சம்மந்தமாக என்னை போலீசாா் விசாரணை செய்தாா்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் ஒப்பந்த அடிப்படையில் பிளம்பிங் வேலை செய்து வருகிறேனா என்றால் இல்லை. பக்கிரிபாளையத்தை சோ்ந்த முத்துகிருஷ்ணன் என்பவரிடம் பணியாளராக இருந்து வருகிறேன். பக்கிரிபாளையத்திலிருந்து திருக்கனூா் ஏரிக்கரை சுமாா் 7 கி.மீ. தூரம் இருக்கும். நான் காலையில் 8.30 முதல் 9 மணிக்கு மேல் எனது அன்றாட பணிக்கு செல்வேன். காா்த்திகேயன் என்பவா் திருக்கனூரைச் சோ்ந்தவா். அவருடைய விலாசம் எனக்கு தெரியாது. அவா் 2,3

ஆண்டுகளாக எனக்கு நண்பர். அவர் கூலி வேலை தான் செய்து வருகிறார். அவர் என்னுடன் வரமாட்டார். சம்பவம் நடந்த அன்று நான் திருக்கனூரில் என் பாட்டி வீட்டில் இருந்தேன். என் பாட்டி வீடு புதுநகரில் உள்ளது. கார்த்திகேயனுக்கு என் பாட்டி வீடு தெரியும். ஏரிக்கரைக்கு நானும், கார்த்திகேயனும், காலைகடன் கழிப்பதற்காக சென்றோம். நான் கையெழுத்து செய்த தாளில் காவல் துறையினர் வழக்கு விசாரணைக்காக வந்தோம். விசாரித்தோம் என்று உள்ளது. எனக்கு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு திசை தெரியாது. அதனால் சாலையிலிருந்து அந்த சம்பவ பகுதி எந்த திசை என்று தெரியாது. நான் அங்கு கையெழுத்து செய்யும் போது விக்கிரவாண்டி ஆய்வாளர் இருந்தார். மற்றொரு காவலர் இருந்தார். என்ன பதவியில் இருந்தார் என்று தெரியாது. நான் இருந்த சம்பவ பகுதியை சுற்றியுள்ள இடங்களை என்னால் அடையாளம் காட்ட முடியாது என்றால் சரிதான். ராஜ்குமார் எனது உடன்பிறந்த தம்பி. அவர் இந்த வழக்கில் சாட்சி என்றால் சரிதான். ஐய்யப்பன் எனக்கு மாமா ஆவார். அவர் எனக்கு தாய் வழி சொந்தம். மற்றொரு மாமா கன்னியப்பன் வானூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக இருக்கிறார். நான் சம்பவ இடத்தில் இருந்து கையெழுத்து செய்ததாக சொல்வது தவறு என்றும், நான் திருக்கனூர் காவல் நிலையம் செல்லும் போது காவல் நிலையத்தில் வைத்து தான் பார்வை மகசரில் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. காவலர் கன்னியப்பனின் வேண்டுகோளுக்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கார்த்திகேயன் என் நண்பர் என்று சொல்வது தவறு என்றும், அவரை யார் என்றே எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. என்னை ஆலமரத்துக்கு பக்கத்தில் வைத்து விசாரித்தார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்ததை பதிவு எதுவும் செய்துக்கொள்ளவில்லை.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**